சுருக்கம்

நிலம் – திருவாரூர் மாவட்டம் – திருவாரூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க 11.89 ஏக்கர் நிலத்தை நேரடி பேச்சு வார்த்தை மூலம் கையகப்படுத்தியது – பின்னேற்பு அளித்து ஆணையிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை

**அரசாணை (2டி) எண்.149** நாள் 01.9.2007

படிக்க

1. சிறப்பு ஆணையர் (ம) நில நிர்வாக ஆணையர், சென்னை 5, கடிதம் எண். எம் 3/36528/06, நாள் 17.4.07
2. திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் ந.க.எண். 34694/2004/ஊ1, நாள் 8.8.07

---

**ஆணை**

இரண்டாவதாக படிக்கப்பட்ட திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தில் திருவாரூர் மாவட்டம், திருவாரூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க கீழ்க்கண்ட நிலங்களை நேரடி பேச்சு வார்த்தையின் மூலம் கையகப்படுத்தவுள்ளதாகவும். இந்நிலங்களை கையகப்படுத்துவதற்கு அரசு அளவில் அனுமதி பெற்ற பின்பு தான் நிலங்களை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வழிமுறைகள் இருப்பினும், திருவாரூர் நகராட்சியில் பொதுமக்களுக்கு புதிய பேருந்து நிலையம் அமைத்துக் கொடுப்பது அத்தியாவசியமாக இருப்பதைக் கருத்தில் கொண்டும் பிரஸ்தாப நிலங்களை நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் எனவே, அரசு அளவில் அனுமதி பெறாமல் நிலங்களை நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டமைக்கு பின்னேற்பு ஆணை வழங்குமாறும், நஞ்சை நிலங்களை கையகப்படுத்துவது அத்தியாவசியமாக உள்ளது என்பதைக் குறிக்கும் வகையில் அத்தியாவசிய சான்று மற்றும் மேற்படி நிலங்கள் 1961ம் ஆண்டின் நில சீர்திருத்த சட்டத்தின் கீழ் கவரப்படவில்லை என்பதற்கு மயிலாடுதுறை நிலச்சீர்திருத்த உதவி ஆணையரிடம் இருந்து பெற்ற சான்றின் நகலையும், அனுப்பியுள்ளார்.

| வ. எண் | நில உரிமையாளர் பெயர் | ச.எண். | வகைப்பாடு | திட்ட (விரிவு) (ச.அடியில்) | கையகப்படுத்தும் விரிவு (ச.அடியில்) |
|---|---|---|---|---|---|
| 1. | முருகையாபிள்ளை தங்கம்மாள். | 209/1 | நஞ்சை | 121780 | 65340 |
| 2. | இராமதாஸ் முதலியார் | 209/2A | நஞ்சை | 28750 | 28750 |
| 3. | இராமசாமி முதலியார் | 209/2B | நஞ்சை | 145490 | 145490 |
| 4. | இராமச்சந்திரன் மைனர் செந்தில் வேலன் | 209/3 | நஞ்சை | 40511 | 40511 |
| 5. | ஏ.ஆர்.வி. இராமலிங்கம் ஏ.ஆர்.வி.செந்தில்குமார் | 207/1 | நஞ்சை | 68400 | 14840 |
| 6. | டி.நடராஜ முதலியார் | 206/1A | நஞ்சை | 20473 | 20473 |
| 7. | எம்.இராமசாமி முதலியார் | 206/1B | நஞ்சை | 3049 | 3049 |
| 8. | செல்வகணபதி | 206/1C | நஞ்சை | 34413 | 34413 |
| 9. | செல்வகணபதி | 206/2 | நஞ்சை | 6098 | 6098 |
| 10. | 1.திருமதி சரஸ்வதி அம்மாள்.<br>2. கந்தசாமி முதலியார்<br>3. முருகையா முதலியார்<br>4. இராமதாஸ் முதலியார் | 206/3A | நஞ்சை | 127195 | 127195 |
| 11. | தட்சிணாமூர்த்தி | 206/3B | நஞ்சை | 10019 | 10019 |
| 12. | செல்வகணபதி | 206/4A | நஞ்சை | 7261 | 7261 |
| 13. | தையல்நாயகி | 206/4B | நஞ்சை | 14519 | 14519 |
| | மொத்தம் | | நஞ்சை | 627958 | 517958 (அல்லது 11.89 ஏக்கர்) |

2. திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலனை செய்தது. திருவாரூர் மாவட்டம், திருவாரூர் நகராட்சி பொதுமக்கட்கு புதிய பேருந்து நிலையம் அமைத்துக் கொடுப்பது அத்தியாவசியமாக இருப்பதை கருத்தில் கொண்டு, கீழ்க்கண்ட நிலங்களை நேரடி பேச்சு வார்த்தை மூலம் கையகப்படுத்த அரசு அளவில் அமைதி பெறாமல் நடவடிக்கை மேற்கொண்ட திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயலுக்கு பின்னேற்பு அளித்து அவ்வாறே இவண் ஆணையிடுகிறது.

| வ. எண் | நில உரிமையாளர் பெயர் | ச.எண். | வகைப்பாடு | திட்ட (விரிவு) (ச.அடியில்) | கையகப்படுத்தும விரிவு (ச.அடியில்) |
|---|---|---|---|---|---|
| 1. | முருகையாபிள்ளை தங்கம்மாள். | 209/1 | நஞ்சை | 121780 | 65340 |
| 2. | இராமதாஸ் முதலியார் | 209/2A | நஞ்சை | 28750 | 28750 |
| 3. | இராமசாமி முதலியார் | 209/2B | நஞ்சை | 145490 | 145490 |
| 4. | இராமச்சந்திரன் மைனர் செந்தில் வேலன் | 209/3 | நஞ்சை | 40511 | 40511 |
| 5. | ஏ.ஆர்.வி. இராமலிங்கம் ஏ.ஆர்.வி.செந்தில்குமார் | 207/1 | நஞ்சை | 68400 | 14840 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | டி.நடராஜ முதலியார் | 206/1A | நஞ்சை | 20473 | 20473 |
| 7. | எம்.இராமசாமி முதலியார் | 206/1B | நஞ்சை | 3049 | 3049 |
| 8. | செல்வகணபதி | 206/1C | நஞ்சை | 34413 | 34413 |
| 9. | செல்வகணபதி | 206/2 | நஞ்சை | 6098 | 6098 |
| 10. | 1. திருமதி சரஸ்வதி அம்பாள். 2. கந்தசாமி முதலியார் 3. முருகையா முதலியார் 4. இராமதாஸ் முதலியார் | 206/3A | நஞ்சை | 127195 | 127195 |
| 11. | தட்சிணாமூர்த்தி | 206/3B | நஞ்சை | 10019 | 10019 |
| 12. | செல்வகணபதி | 206/4A | நஞ்சை | 7261 | 7261 |
| 13. | தையல்நாயகி | 206/4B | நஞ்சை | 14519 | 14519 |
| | மொத்தம் | | நஞ்சை | 627958 | 517958 (அல்லது 11.89 ஏக்கர்) |

// ஆளுநரின் ஆணைப்படி //

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5
நகராட்சி ஆணையர், திருவாரூர் நகராட்சி, திருவாரூர்.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர்,
சென்னை – 5.

நகல்

முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை –9
வருவாய் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9
நிதித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9
வருவாய்த் துறை, சென்னை –9
நிதித்துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (அ.ந.II) துறை
இ.கோ/ உ.ந.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்